SRI V. K. KOTHANDARAMAN : *1944-வது வருஷத்திய மத்திய சர்க்கார் சட்டப்படி பீடி தயாரிப்பதற்காக (கொடுக்கக் கூடிய) புகையிலே லைசன்ஸ் எல். 2, எல். 5 என்ற லைசன்ஸ்கள் கொடுக்கப்படும். இதற்கு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருடைய அனுமதியைக் கேட்டுத்தான் கொடுக்கிறுர்கள். ஆகவே இது போன்ற லைசன்ஸ் கொடுக்கும்போது விதிகளை மீறக்கூடிய விவரங் களைப்பற்றி மத்திய சர்க்காருக்கு ராஜ்ய சர்க்கார் தெரியப்படுத்தி யிருக்கிறுர்களா ? இல்லையென்றுல் இனிமேலாவது இவ்விதம் தெரிவிக்க முன் வருவார்களா ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *கனம் அங்கத்தினர் அவர்கள் தகவல்கள்தான் கொடுக்கிறுர், கேள்வி கேட்கவில்லை. இம்மாதிரிப்பட்ட லைசன்ஸ்கள் கொடுப்பது மத்திய சர்க்காருடைய பொறுப்பிலுள்ளது. ராஜ்ய சர்க்காருக்கு இதில் எந்தவிதமான பொறுப்பும் கிடையாது.*

SRI K. ANBAZHAGAN : *தலைவர் அவர்களே, பீடித் தொழி லாளர்களுக்கு கூலி கொடுப்பதிலே, அவர்களை ஏமாற்றக்கூடிய முறையில், லைசன்ஸ் பெறுவதற்காக கம்பெனிகளின் பெயரை மாற்றிச் சொல்லக்கூடிய பல தவறுகள் நடைபெற்று வருகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அப்படியாயின் அத்தவறுகளை நீக்குவதற்கு அரசாங்கம் என்ன வகையான நட வடிக்கை எடுத்திருக்கிறது ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *என்ன தவறு ஏற்பட் டிருக்கிறது என்பதில் ஒன்றை எடுத்துச்சொன்றுல் என்றுல் பதில் சொல்லமுடியும். பொதுவாக தவறுகள் என்று சொன்றுல் பதில் சொல்லுவது மிகவும் கஷ்டம்.*

SRI M. P. SARATHI : *அமைச்சர் அவர்கள் ஒரு தவறை காண்பிக்கும்படி சொன்னுர்கள். நான் சொல்லுகிறேன், வேலூரில் ரூ. 1-11-0 கூலி கொடுக்க வேண்டும் என்று சொல்லி யிருந்தும் ரூ. 1-4-0 கொடுத்து வேலை கொடுத்துக்கொண்டிருக்கிறுர் கள். இதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லுகின்றபோது இதைப்பற்றி சொன்னேன். இது தொழில் தகராறு சம்பந்தமானது, இம்மாதிரி தொழில் தகராறு ஏற்பட்ட வுடன் சட்டப்படி லேபர் கமிஷனரிடத்தில் புகார் செய்ய வேண்டும். அம்மாதிரி புகார் செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

Poultry

* 254 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Poultry Farms to which the Government give grants and loans?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

---

a Printed as Appendix IV on page 135 infra.

30th January 1961]

SRI V. SUBBIAH : ஸார், கோவில்பட்டியில் சமுதாய நலத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட கோழிப்பண்ணையில் நோய் வந்ததின் காரணமாக நஷ்டம் ஏற்பட்டு அந்த கோழிப்பண்ணையே மூடப்பட்டு விட்டது. இவ்விதம் நோய்வராமல் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI A. VEDARATHNAM : தஞ்சை ஜில்லாவில் ஆலத்தம் பாடி என்ற இடத்தில் ஒரு கோழிப்பண்ணை ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

Compost manufacture (training)

* 255 *Q.*—SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கம்போஸ்ட் உரம் தயாரிப்பு பயிற்சி பெற எத்தனை அதிகாரிகள் வெளிராஜ்யங்களுக்கு, **(ii)** டெல்லிக்கு ; **(iii)** வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர் ?

(இ) எவ்வளவு காலப் பயிற்சி ?

(உ) பயிற்சிபெற அனுப்பப்பட்ட அதிகாரிகள் கெஜட் பதிவுள்ளவர்களா (Gazetted)? இல்லாதவர்களா (Non-Gazetted)?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*), (*b*) & (*c*) Four Gazetted Officers of the Agriculture Department were sent for training in compost manufacture at Delhi during 1957. The duration of the training was two weeks.

SRI M. P. SARATHI : இதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து ஏதாவது உதவி கிடைக்கின்றதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய சர்க்காரிலிருந்து உதவி கிடைக்கும்.

SRI V. K. KOTHANDARAMAN : இம்மாதிரியான கம்போஸ்ட் உரம் நல்ல முறையில் தயார் செய்வதற்காக நம் ராஜ்யத்தில் எத்தனை பஞ்சாயத்து போர்டுகள், எத்தனை நகரசபைகள் இவைகளுக்கு வெகுமதி அளிக்கப்பட்டது என்பதை சொல்லமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தத் தகவல் என்னிடமில்லை.